

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2049 | பிப்ரவரி 22, 2018 | புரட்சி 17 | முழக்கம் 06 | விலை: ரூ.3.00

## தமிழ்நாடு மாணவர் கழகம் ஆளுநர் மாளிகை முற்றுகை–கைது



தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பில் ஆளுநர் மாளிகை முற்றுகைப் போராட்டம் சென்னை மாவட்ட செயலாளர் உமாபதி முன்னிலையில் பாரி சிவக்குமார் (மாணவர் கழக அமைப்பாளர்) தலைமையில் நடந்தது.

21.01.18 அன்று மாலை 3 மணிக்கு, சென்னை பனகல் மாளிகை முன்பு டெல்லியில் மர்ம மரணம் அடைந்த திருப்பூரைச் சேர்ந்த மருத்துவர் சரத் பிரபு மரணத்திற்கு நீதி விசாரணை வேண்டியும், வெளி மாநிலங்களில் படிக்கும் தமிழ்நாட்டு மாணவர்களின் தொடர் படுகொலையைக் கண்டித்தும், தோரட் பரிந்துரைகளை அமுல்படுத்தக் கோரியும் அனைத்து கல்லூரிகளிலும் மாணவர்களின் குறைகளைக் கேட்க பேராசிரியர் தகுதியுள்ள தனி அலுவலர் நியமிக்க வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆளுநர் மாளிகையை முற்றுகையிடச் சென்ற கழக அமைப்பினர் 30 பேர் கைது செய்யப்பட்டனர். அனைவரும் சைதை மாநகர தொடக்கப் பள்ளியில் அடைக்கப்பட்டு, மாலை விடுதலை செய்யப்பட்டனர்.

### வேட்டைக்காரன் புதூரில் காந்தியார் நினைவுநாள் பொதுக்கூட்டம்

ஆனைமலை திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் வேட்டைக்காரன் புதூரில் காந்தி படுகொலை நாள் கண்டன பொதுக்கூட்டம் 07.02.2018 மாலை 6 மணிக்கு நடைபெற்றது நிகழ்வின் தொடக்கமாக ரோஜா கலைக் குழுவின் பறை இசை முழக்கத்துடன் தொடங்கி, மா.ப.கண்ணையன் பாடல்கள் முழங்க, காவை.இளவரசனின் மந்திரமல்ல...தந்திரமே! நடைபெற்றது. நிகழ்ச்சியின் தலைமையேற்று சோ.மணி மொழி, வரவேற்புரை இரா.ஆனந்த், தொடக்கவுரையாக சிவகாமி, வே.வெள்ளிங்கிரி, மடத்துக்குளம் மோகன், கா.சு.நாகராசு (த.தி.க), கழகப் பொருளாளர் துரைசாமி, நிறைவுரையாக கழகத்தின் தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றினர். நன்றி உரை வினோதினி. நிகழ்ச்சி ஏற்பாடுகளை தோழர்கள் வே.அரிதாசு, அப்பாதுரை, மணி, சிவா, குமார், சபரிகிரி, விவேக், முருகேசன், கணேசன், கஜா சிறப்பாக செய்தனர். நிகழ்ச்சியில் தென்னை மரத் தொழிலாளர்கள் கருப்புசாமி, திராவிடர் கழகத் தோழர்கள், த.பெ.தி.க. தோழர்கள், தி.வி.க. தோழர்கள், வி.சி.க தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்த சிறிய கிராமத்தில் 2000 ரூபாய்க்கு கழக நூல்கள் விற்பனை ஆயின.

### ஜாதி பஞ்சாயத்துக்களுக்கு உச்சநீதிமன்றம் எச்சரிக்கை

# ‘கோத்திர’– ‘சம்பிரதாய’க் காவலர்களாக உங்களை நியமித்தது யார்?

அரியானா மாநிலத்தில் ஜாதி மறுப்புத் திருமணம் செய்வோரை வன்முறை மூலம் அச்சுறுத்தி, திருமணங்களைத் தடுப்பது; பிரித்து வைப்பது போன்ற வேலைகளைச் செய்யும் கட்டப் பஞ்சாயத்துகளைத் தடை செய்யக் கோரி உச்சநீதி மன்றத்தில் ஒரு தொண்டு நிறுவனம் வழக்கு தொடர்ந்தது. உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியிலான அமர்வு முன் வழக்கு கடந்த பிப்.5ஆம் தேதி விசாரணைக்கு வந்தது.

கட்டப் பஞ்சாயத்துக்காரர்கள் சார்பாக வாதிட்ட மூத்த வழக்கறிஞர் நரேந்திர ஹீடா கட்டாயப் பஞ்சாயத்து செயல்பாடுகளை நியாயப்படுத்தி வாதிட்டார். வெவ்வேறு ஜாதிகளுக்கிடையே நடக்கும் திருமணங் களை கட்டப் பஞ்சாயத்துக்கள் எதிர்ப்பது இல்லை என்றும், வேறு மாநிலங்களைச் சார்ந்தவர்களைத் திருமணம் செய்து கொள்வதைக்கூட எதிர்ப்பது இல்லை என்றும், காலம்காலமாக பின்பற்றப்படும் ஒரே கோத்திரங்களுக்கிடையே நடக்கும் முறைகேடான திருமணங்களையும் சகோதர சகோதரி உறவு முறைகள் கொண் டோரிடையே நடக்கும் திருமணங்களையும் தான் எதிர்க்கிறது என்றும் , பண்பாட்டைக் காக்க மனசாட்சிக் காவலர்களாக செயல்படுகிறது என்றும் வாதிட்டார். இந்த வாதங்களில் திருப்தியடையாத தலைமை நீதிபதி ‘தீபக் மிஸ்ரா’ சமூகத்தின் காவலர்களாக உங்களை நியமித்தது யார் ? அல்லது மனசாட்சியின் காவலர்களாக உங்களை நியமித்தது யார் ? அந்த உரிமையை நீங்களே எடுத்துக் கொள்ளாதீர்கள். எங்களுக்கு சம்பிரதாயம், கோத்ரம் பார்த்து, சமூகத்தால் தடை செய்யப்பட்ட உறவுகளுக்கிடையே நடக்கும் திருமணங்கள் பற்றி எல்லாம் கவலை கிடையாது. சட்டத்தின் படி ஒரு திருமணம் நடக்கவில்லை என்றால் அதை நீதிமன்றம் கவனித்துக் கொள்ளும். திருமணம் சட்டப்படியானதா என்பதைக் கண்காணிக்கும் உரிமை கட்டப் பஞ்சாயத் துகளுக்கு இல்லை என்று தலைமை நீதிபதி கூறினார்.

(The court asked, “who has appointed you as guardians of society or its conscience keeper? Do not assume that role. We are not concerned about tradition, gotra, spainea or prohibited degrees of relationship. If a marriage is not permissible under law, then there are courts to annul it. Khaps have no business determining the legality of marriage.”)

இவ்வாறு கூறியதோடு, மத்திய அரசு இந்தப் பிரச்சினையில் அலட்சியம் காட்டி செயல்படுவதாகவும் அதிருப்தி தெரிவித்தார். கூடுதல் அரசு வழக்கறிஞர் பிங்கி அனந்த், ஜாதி மறுப்பு, மத மறுப்பு, கோத்ரா மறுப்பு திருமணங்களைக் காட்டி நடக்கும் வன்முறைகளைத் தடுக்க அரசிடம் என்ன திட்டமிருக்கிறது என்பதை நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்க மேலும் இரண்டு வாரம் கேட்டபோது தலைமை நீதிபதி அரசின் அலட்சியத்தைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

## குமாரப்பாளையத்தில் ஆரியம்–திராவிடம்–தமிழ்த் தேசியம் கருத்தரங்கம்!

நாமக்கல் மாவட்டம், குமாரப்பாளையத்தில் ஆரியம்–திராவிடம்–தமிழ்த்தேசியம் குறித்த கருத்தரங்கம் மற்றும் விவாத நிகழ்ச்சி குமாரபாளையம் சி.எஸ்.அய். பள்ளியில் ஞாயிற்றுக்கிழமை (11.02.2018) மதியம் 2.00 மணியளவில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு நாமக்கல் மாவட்டத் தலைவர் மு.சாமிநாதன் தலைமை வகித்தார். மாவட்டச் செயலளார் மு.சரவணன், மாவட்ட அமைப்பாளர் மா.வைரவேல் மற்றும் மாவட்ட பொருளாளர் அ.முத்துப்பாண்டி முன்னிலை வகித்தனர். திருச்செங்கோடு பகுதித் தோழர் கவுதமன் வரவேற்புரையாற்றினார். வழக்கறிஞர் கிருஷ்ணன் துவக்கவுரையாற்றினார். இதையடுத்து குமாரபாளையம் பகுதி தோழர் கலைமதி ஆரியம்–திராவிடம்–தமிழ்த் தேசியம் பற்றி விரிவாகவும், வரலாற்று ரீதியாகவும் விளக்கவுரை யாற்றினார். பின்னர் தோழர்களின் கேள்விகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. நிகழ்விற்கு பள்ளிபாளையம், குமாரபாளையம், ராசிபுரம் மற்றும் திருச்செங்கோடு உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த தோழர்கள் வந்திருந்தனர். இறுதியாக குமாரபாளையம் பகுதி நகர செயலாளர் தண்டபாணி நன்றியுரையாற்றினார்.

# மேட்டூரில் அண்ணா – காந்தி நினைவு நாள் கூட்டம்




மேட்டூரில் 5.2.2018 திங்கள் மாலை 6 மணிக்கு மேட்டூர் டி.கே.ஆர். இசைக் குழுவினரின் பறைமுழக்கத்துடன் கூட்டம் தொங்கியது. அதனைத் தொடர்ந்து பகுத்தறிவு இசை நிகழ்ச்சி நடைபெற்றது. 7 மணிக்கு நடைபெற்ற வீதி நாடகத்தில் சாமியார்களின் மோசடிகளை விளக்கியும், ‘ஆண்டாள்’ குறித்த கதைப் பற்றிய விழிப்புணர்வு நாடகமும் மக்களிடம் பெரும் வரவேற்பைப் பெற்றன. அதனைத் தொடர்ந்து மேட்டூர் நகரத் தலைவர் செ. மார்ட்டின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் சி.கோவிந்தராசு, ம.தி.மு.க. சேலம் மாநகர மாவட்டச் செயலாளர் அ.ஆனந்தராஜ், மேற்கு மாவட்டச் செயலாளர் ந. மகேந்திரவர்மன், மாநில தலைமை செயற்குழு உறுப்பினர் அ. சக்திவேல் ஆகியோரின் உரையைத் தொடர்ந்து, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநில அமைப்புச் செயலாளர் ஆ. வந்தியத்தேவன், ‘பகுத்தறிவாளர்கள் பார்வையில் அறிஞர் அண்ணா’ என்னும் தலைப்பில் சிறப்புரை யாற்றினார். தொடர்ந்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி, ‘திராவிடர் இயக்கப் பார்வையில் காந்தியடிகள்’ என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றினார். இறுதியாக இர. பூவழகனின் நன்றியுரையுடன் கூட்டம் நிறைவு பெற்றது. கூட்டத்திற்கு ஏராளமான பொது மக்களும், பல்வேறு பகுதிகளி விருந்து தோழர்களும் வந்திருந்து அறிவு விளக்கம் பெற்றனர்.

# சூளுரைத்தார், கவிஞர் வைரமுத்து

# வடமொழி எதிர்ப்போடு தமிழின விடுதலையை முன்னெடுப்போம்

**“வடமொழி எதிர்ப்பும் இனவிடுதலை இயக்கமும் மீண்டும் புத்துயிர் பெறச் செய்வோம்” என்று சூளுரைத்தார் – கவிஞர் வைரமுத்து.**

ஆண்டாள் தேவதாசி மரபில் வந்தவராக இருக்கலாம் என்று ஓர் ஆய்வாளர் கருத்தை மேற்கோள் காட்டினார் என்பதற்காக, கவிஞர் வைரமுத்துவை பார்ப்பனர்கள் மூர்க்கத்தனமாக எதிர்த்தனர்.எச்.ராஜா என்ற பார்ப்பனர், வைரமுத்துக் குடும்பத்தினரை இழிவுபடுத்தினார். அய்யங்கார் பார்ப்பனர்கள், வைரமுத்து, திருவில்லிபுத்தூர் கோயிலுக்கு வந்து ஆண்டாளிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று திறந்தமேனியுடன் வீதிக்கு வந்து போராடினார்கள். ‘தினமணி’ ஆசிரியரான ஆர்.எஸ்.எஸ்.பார்ப்பனர் வைத்தியநாதனுடன் கடந்த சில ஆண்டுகளாக நெருக்கம் காட்டி வந்தார் வைரமுத்து. கட்டுரை வாசிப்பு நிகழ்ச்சிகளை பா.ஜ.க.வின் ஊதுகுழலான ‘தினமணி’யே ஏற்பாடு செய்து அந்தக் கட்டுரைகளை முழுமையாக ‘தினமணி’ வெளியிட்டு வந்தது.

தருண் விஜய் என்ற ஆர்.எஸ்.எஸ்.காரர், திருக்குறள் பெருமை பேசினார் என்பதற்காக அவருக்கு தமிழகத்தில் மேடை அமைத்துக் கொடுத்தார் வைரமுத்து. பா.ஜ.க.விடம் வைரமுத்து காட்டிய ‘நேசக்கரம்’ நீண்ட நாள் நிலைக்கவில்லை. ‘ஆண்டாள்’ பற்றிய அவர் உரையில், இடம் பெற்ற ஒரு வரியைப் பெரிதாக்கி பார்ப்பனர்கள் வைரமுத்துக்கு எதிராக தொடைத் தட்டிக் கிளம்பினர். ‘தினமணி’ வைத்தியநாத அய்யரும், தானாகவே திருவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயிலுக்குச் சென்று வைரமுத்து கட்டுரையை வெளியிட்டதற்காக, ‘ஆண்டாள்’ சன்னதியில் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டு, ஜீயரிடமும் மன்னிப்புக் கேட்டார். வைரமுத்து மன்னிப்புக் கேட்கவில்லை, வருத்தம் தெரிவித்தார். அதற்குப் பிறகுதான் கவிஞர் வைரமுத்துவுக்கு பார்ப்பனர்களை நம்பிப் போன தவறு புரியத் தொடங்கியது. ‘தினமணி’ ஏற்பாட்டில் 13 கட்டுரை வாசிப்புகளை நடத்தினார் கவிஞர் வைரமுத்து. 13ஆவது கட்டுரை வாசிப்புதான் ஆண்டாள். அத்துடன் முறிந்து போனது அந்த உறவு.

14ஆவது வாசிப்புக்கு கவிஞர் வைரமுத்து தேர்வு செய்தது மறைமலை அடிகளை. பார்ப்பன வடமொழியான சமஸ்கிருதத்தை எதிர்த்து, தனித்தமிழ் இயக்கம் கண்ட மறைமலை அடிகளாரைக் கையில் எடுத்து, பார்ப்பனிய எதிர்ப்புக் களத்தை சூடேற்றியிருக்கிறார் வைரமுத்து. இந்த முறை கவிஞர் வைரமுத்துவின் ‘தமிழாற்றுப் படை’ நிகழ்வை அவரே தனது சொந்தப் பொறுப்பில் சென்னையில் காமராசர் அரங்கில் பிப்.13 அன்று ஏற்பாடு செய்தார். உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி நாகமுத்து தலைமையில் துணைவேந்தர் திருவாசகம் முன்னிலையில் நிகழ்வு நடந்தது. மேடையில் மறைமலை அடிகளார் படம் வைக்கப்பட்டு நிகழ்வுக்கு வந்த முக்கிய பிரமுகர்கள் படத்துக்கு மலர்களைத் தூவினர். பார்ப்பன எதிர்ப்பு உணர்வு அலையில் அரங்கம் உணர்ச்சிப் பிழம்பாகத் திகழ்ந்தது.

“உறங்கிக் கிடந்த தமிழ் உணர்வும், இன உணர்வும் அண்மையில் உயிர்த்துடிப்போடு எழுந்து நிற்பது கண்டு தமிழ்ச் சமூகம் சிலிர்த்து நிற்கிறது” என்று பலத்த கரவொலிக்கிடையே தனது உரையைத் தொடங்கிய கவிஞர், “ஒரு மொழி பெருமையும் உரிமையும் பெற வேண்டுமானால் அதிகார மய்யங்களில் அது நின்று நிலவ வேண்டும். மாநில அரசு அலுவலகங்களில் தமிழ்நாட்டுக்குள் இயங்கும் மத்திய அரசு அலுவலகங்களில் நீதிமன்றங்களில் கல்விக் கூடங்களில் ஊடகங்களில் ஒரு இனத்தின் அன்றாடப் பேச்சு வழக்கில் அது தொடர்ந்து நிலைபெற வேண்டும்” என்றார். குடியரசுத் தலைவர் கொச்சியில் நடந்த ஒரு விழாவில் நீதிமன்றத்தில் வழக்காடு மொழியாகத் தாய்மொழிகளே இருக்க வேண்டும் என்கிறார். ஆனால் குடியரசுத் தலைவர் இப்படி கூறிய பிறகும், தமிழை வழக்காடு மொழியாக்க மத்திய அரசு மறுக்கிறது. இராஜஸ்தான், உத்தரபிரதேசம், மத்திய பிரதேச நீதிமன்றங்களில் இந்தியில் தீர்ப்பளிப்பது நடைமுறையில் இருக்கும்போது தமிழில் தீர்ப்பளிப்பது மட்டும் சாத்தியம் ஆகாதா? இந்திய மொழிகளில் எந்த மொழிக்கும் தமிழ் குறைந்ததா? என்ற கேள்வியை மத்திய அரசை நோக்கி எழுப்பினார்.

“சிவபெருமான் தன் உடுக்கை எடுத்தான்; ஒரு பக்கம் அடித்தான் தமிழ் பிறந்தது; மறுபக்கம் அடித்தான் சமஸ்கிருதம் பிறந்தது என்று



நம்புகிறவர்களைக் கேட்கிறேன், இரண்டும் சமமான மொழிகள் தானே! பிறகு ஒரு மொழி மட்டும் எப்படி உயர்ந்தது என்கிறீர்கள்? அப்படியானால் நீங்கள் சிவபெருமானையே எதிர்க்கிறீர்களா?” என்ற கேள்வியை எழுப்பிய போது அரங்கமே கைதட்டலால் அதிர்ந்தது.

“திராவிட மொழிக் குடும்பம் தோன்றுவதற்கு முன் தென்னிந்தியா முழுக்கத் தமிழ் பரவி இருந்தது. இன்று தென்னிந்தியாவில் ஒரு பகுதியாக வெறும் 1,30,058 சதுர கிலோ மீட்டராகச் சுருங்கியிருக்கிறது. இது மேலும் சுருங்குவதற்கு தமிழ் சம்மதிக்காது. தமிழர்களும் சம்மதிக்க மாட்டார்கள். அதனால் தமிழ் உணர்வு மீண்டும் முன்னெடுக்கப்படுகிறது” என்று சமஸ்கிருதத் திணிப்பை நடத்தி வரும் பா.ஜ.க. ஆட்சியை மறைமுகமாக எச்சரித்தார்.

“தாக்குவதல்ல வீரம்; தாங்குவதே வீரம்; பொறுமை காப்போம்; ஒற்றுமையால் தமிழ் இனத்தைக் கட்டிக் காப்போம்” என்ற முன்னுரையோடு தொடங்கியது அவரது உரை:

மறைமலை அடிகளுக்கு பல்வேறு பெருமைகள் இருந்தாலும் அவருக்கு உரிய தனித்த பெருமை - தமிழ் - வடமொழி சார்பு இன்றி தனித்து இயங்கும் என்பதை நிலைநிறுத்தி அதற்காக வடமொழியை எதிர்த்து தனித் தமிழ் இயக்கம் கண்டதுதான் என்றார், வைரமுத்து.

பார்ப்பனியம் தமிழை ஊடுருவி தமிழரின் வரலாற்றையே துடைத்ததை அவர் சுட்டிக் காட்டினார்.

“வேதாரண்யம் என்று சுட்டும்போது அந்த ஊரின் வயது – வரலாறு – பண்பாடு என்ற மூன்றும் நமக்கு முற்றும் விளங்கவில்லை. திருமறைக்காடு என்று சுட்டப்படுமிடத்து அதன் நூற்றாண்டுகளை நம்மால் நுகர முடிகிறது. கபிஸ்தலம் என்ற பெயரை அகழ்ந்து பார்த்தால் உள்ளே ‘குரங்காடுதுறை’ தோன்றுகிறது. அருணாசலம் என்ற சொல்லின் நதிமூலம் தேடி நகர்ந்தால் அது ‘திருவண்ணாமலை’யில் முடிகிறது. ஜம்புகேஸ்வரம் என்ற ஊர்ப் பெயரை ஊடுருவிப் பார்த்தால், உள்ளே ‘திருவானைக்கா’ தென்படுகிறது. இப்படித்தான் தமிழ் மொழியின் மீது வந்து படிந்த பிற மொழிகள் தமிழரின் வரலாற்றைத் துடைத்துவிட்டு, தம்மிலிருந்தே வரலாறு தொடங்கப்பெற வேண்டும் என்று சூழ்வினையாற்றின.

இந்தப் பெயர் மாற்றம் என்ற பெருஞ் செயலைப் போகிற போக்கில் புறந்தள்ளிவிட முடியாது.

மறைமலை என்ற அலை மட்டும் அடித்திராவிடில், காலப்போக்கில் தமிழ் இலக்கியங்களின் மூலங்களும்கூட முகம் மாறிப் போயிருக்கலாம். தொல்காப்பியம் ஐந்திரமாகியிருக்கலாம்; தொல்காப்பியர் திரணதூமாக்கினி ஆகியிருக்கலாம்; திருவள்ளுவர் ஸ்ரீவல்லபராய்த் திரிந்திருக்கலாம்; தமிழ்நாடு என்பது வட இந்தியாவின் தென்துண்டு என்று வரலாறு வளைக்கப்பட்டிருக்கலாம்” - என்றார்.

தனித்தமிழ் இயக்கமாகத் தொடங்கி தமிழர் இன மீட்பு இயக்கமாக நீட்சிப் பெற்றதைக் குறிப்பிட்ட வைரமுத்து, மறைமலை அடிகளுக்கும் பெரியாருக்கும் இருந்த உறவையும் பெருமையுடன் பதிவு செய்தார்.

“தண்ணீரைத் தேடிப் பயணித்த கடப்பாரை, புதையலில் முட்டிப் பொறி தட்டியதுபோல, மொழி மீட்சிக்குத் தோன்றிய தனித்தமிழ் இயக்கம், இனமீட்சியில் போய் முடிந்தது.

திராவிட இயக்கத்தைக் கொழுந்துவிட்டு எரியச் செய்த கொள்கைகளுள் ஒருபாதி இனம்; மறுபாதி மொழி. அந்த மொழிக் கொள்கை மறைமலையடிகளின் மூளைக் குழந்தை என்பதை மறைக்கவோ மறுக்கவோ இயலாது. ஒருவரைப் பாராட்டுவதில் பணத்தைவிடச் சிக்கனமாய்ச் சொற்களைப் பயன்படுத்துகிற பெரியார், மறைமலையடிகளைத் தன் கரமென்று சொல்லியிருக்கிறார்.

“மறைமலையடிகளும் எம்.எல்.பிள்ளையும் எனக்கு வலக்கையும் இடக்கையும் போன்றவர்கள். எனக்கு ஏதேனும் அய்யம் உண்டாகும் போதெல்லாம் அவர்களிடமே தீர்த்துக்கொள்வேன்” என்ற பெரியாரின் கூற்றை நான் பெரிதினும் பெரிதாய்க் கருதுகிறேன்.”

பார்ப்பன ஊடகங்களின் வடமொழிப் பற்றை மறைமலை அடிகள் நடத்திய இயக்கம் மாற்றியதையும், திராவிட இயக்கத்துக்கும் தனித் தமிழ் இயக்கத்துக்கும் உள்ள உறவையும் கவிஞர் வைரமுத்து இவ்வாறு பதிவு செய்தார்.

“மறைமலையடிகள் அன்று கொளுத்திப் போட்ட நெருப்புதான் இன்றளவும் வெவ்வேறு திரிகளில் விளக்குகளாய் விளக்கமுற நிற்கிறது.

முதலில் அது ஊடக மொழியை உருமாற்றிப் போட்டது. சில ஏடுகள் ‘ஜல சப்ளை ரத்து’ என்று தலைப்பிட்டுக் கொண்டிருந்தன. இதனுள் ஜலம் - சம்ஸ்கிருதம்; சப்ளை - ஆங்கிலம்; ரத்து - உருது. இது ‘தண்ணீர் வரத்து நிறுத்தம்’ என்று தமிழாகியது மறைமலையடிகளால்.

திராவிட இயக்க மேடைகளும் மறைமலையடிகளின் தாக்கத்தால் ஆக்கமுற்றன. ‘அக்ராசனர்’ தலைவரானார்; ‘மகாஜனங்கள்’ பொதுமக்கள் ஆயினர்; ‘பிரேரணை’ தீர்மானமாயிற்று; ‘நமஸ்காரம்’ வணக்கமாயிற்று. மாநில அலுவல் மொழியாகத் தமிழாவதற்கு ஒரே வழி ஆங்கிலத்தை எழுப்பிவிட்டுத் தமிழ் ஏறி அமர்வதுதான். ‘முனிசிபாலிட்டி’ நகராட்சி ஆயிற்று; ‘கார்ப்பரேஷன்’ மாநகராட்சி ஆயிற்று; ‘கமிஷனர்’ ஆணையாளரானார்; ‘ஜி.ஓ’ அரசாணையானது; ‘சர்க்குலர்’ சுற்றறிக்கை ஆனது. மறைமலையடிகளின் நீண்டு விழுந்த நிழல்களே இவையெல்லாம்.


அறிஞர் அண்ணா இந்த மண்ணுக்குத் ‘தமிழ்நாடு’ என்று பெயர் சூட்டியதும், தமிழ்நாட்டுத் தலைநகரத்திற்கு கலைஞர் ‘சென்னை’ என்று பெயர் சூட்டியதும் மறைமலையடிகளால் நேர்ந்த மங்கலங்களாகும்.”

தருண் விஜய் வழியாக வைரமுத்துவைப் பயன்படுத்தி, ‘தினமணி’ வைத்தியநாத அய்யர், தமிழக பா.ஜ.க.வுக்கு ‘தமிழ்ச் சாயம் பூச முயற்சித்தார். சூழ்ச்சிகள் வெற்றிப் பெறவில்லை. மீண்டும் பார்ப்பனிய சமஸ்கிருத எதிர்ப்புக் களத்தை ‘அவாள்களே’ உருவாக்கி தந்ததோடு, பெரியார் கருத்துகளுக்கு மேலும் வலிமை சேர்த்துள்ளனர்.

**– நமது செய்தியாளர்**

## மேட்டூரில் காதலர் நாளில் இனிப்பு வழங்கிக் கொண்டாட்டம்

உலக காதலர் தின நாளில் இந்து மற்றும் இஸ்லாமிய மத அடிப்படைவாத அமைப்புகள் காதலர்களுக்கு இடையூறு அளிக்கும் விதமாக காதலர்களை கண்டால் நாங்கள் தாலி கட்ட சொல்லுவோம் என்று அறிக்கை விட்டிருந்தனர். அதனால் 14.02.2018 அன்று தோழர்கள் திராவிடன் பரத் (கொளத்தூர்), கண்ணன், சந்திரசேகர் (நங்கவள்ளி) ஆகியோர் ஒருங்கிணைப்பில் மேட்டூர் அணைப் பூங்காவில் காதலர்கள் வரவேற்பு பதாகையுடன் நின்று பூங்காவிக்கு வந்த காதலர்கள், பொதுமக்கள் என அனைவருக்கும் மலர், இனிப்பு மற்றும் விழிப்புணர்வு துண்டறிக்கை ஆகியவை விநியோகித்தனர். நிகழ்வில் வைரவேல் மாரியப்பன் (நாமக்கல் மாவட்ட அமைப்பாளர்), கிருட்டிணன் (சேலம் மாவட்ட அமைப்பாளர்), முகில்ராசு (திருப்பூர் மாவட்டத் தலைவர்), சிவகாமி (தமிழ்நாடு அறிவியல் மன்ற அமைப்பாளர்) உள்ளிட்ட 30 தோழர்கள் கலந்து கொண்டனர்.



## வேத மரபைத் தோலுரித்து, விடுதலை இராசேந்திரன் பேச்சு (3)

# ‘நாத்திகர்’களுக்கு சிகிச்சைத் தரக் கூடாது என்றவர் சங்கராச்சாரி

*‘ஆண்டாள் முதல் சங்கராச்சாரி வரை... தமிழை மறுக்கும் வேதமரபுகள்’ என்ற தலைப்பில் ஜன.30, 2018 அன்று சென்னை இராயப்பேட்டை ஆனந்த் அரங்கில் திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய கருத்தரங்கில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் நிகழ்த்திய உரையிலிருந்து... (கடந்த வார தொடர்ச்சி)*

பிரிட்டிஷ் ஆட்சியில் சமஸ்கிருதத்துக்கு மட்டும் தனியே கல்லூரி தொடங்க பார்ப்பனர்கள் மனு தந்ததையும் அதற்கு இராஜாராம் மோகன்ராய் கடும் எதிர்ப்பு தெரிவித்ததையும் குறிப்பிட்டோம்.

இது குறித்து பல ஆண்டுகாலம் விவாதங்கள் நடந்தன. கடைசியில் பிரிட்டிஷ் அரசு சமஸ்கிருதக் கல்வித் திட்டத்தைக் கைவிட்டது. இதில் உறுதியாக செயல்பட்டவர். அப்போது பிரிட்டிஷ் அமைச்சரவையில் சட்டக் குழு உறுப்பினராக இருந்த மெக்காலே தான், 1835ஆம் ஆண்டு எத்தகைய கல்வியை இந்தியாவுக்கு வழங்க வேண்டும் என்று அவர் முன் வைத்த கல்விக் குறிப்பு ஆவணம், வரலாற்று முக்கியத்துவம் கொண்டது. மெக்காலே ஆவணம் இவ்வாறு கூறியது.

> “பிரிட்டிஷ் அரசு மத சகிப்புத் தன்மையைக் கடைப்பிடிப்பதோடு அனைத்து மதத்தினரிடமும் பாகுபாடின்றி நடந்து கொள்ள வேண்டும். முக்கியமான பிரச்சினைகளில் தவறான வழிகளைப் போதிப்பதும் அற்பப் பயனை விளைவிப்பதுமான சமஸ்கிருத இலக்கியங்களைக் கற்றுக் கொடுப்பது என்பது, பகுத்தறிவுக்கும் ஒழுக்க நெறிக்கும் ஏற்புடையது அன்று. அத்தோடு அது நடுவு நிலையும் ஆகாது. சமஸ்கிருதம் வெறும் தரிசு நிலம். அதைக் கற்பதனால் அறிவு விளையாது. அதில் வானளாவிய மூட நம்பிக்கைகள் நிறைந்துள்ளன என்பதால் அந்த இலக்கியங்களைக் கற்பிக்க வேண்டும் என்று நம்மிடம் கூறுகிறார்கள். அதற்கு நாம் இசைந்தோமெனில் திரிபுபடுத்தப்பட்ட வரலாறு, தவறான வானவியல், ஏமாற்று மருத்துவம் ஆகியவற்றையே கற்பிக்க நேரிடும். இந்த மோசடிகள் நேர்மையற்ற ஒரு மதத்தின் புனித நூல்களில் இருப்பதனால் அவை கற்பிக்கப்பட வேண்டும் என்பது மூடத்தனம். **இந்தியரைக் கிறித்துவத்திற்கு மாற்ற வேண்டும் என்ற எண்ணத்திலிருந்து நாம் விலகியே இருந்துள்ளோம். இனியும் அவ்வாறே தொடர்வோம். அதற்காக, ஒரு கழுதையைத் தொட்டு விட்டால் சுத்தி செய்வதற்கு என்ன மந்திரங்கள் கூற வேண்டும், ஓர் ஆடு கொல்லப்பட்டால் அதற்குப் பரிகாரங்களாக எந்த வேதப் பாடலைப் பாட வேண்டும் என்பதை இளைஞர்களுக்குக் கற்றுக் கொடுப்பதற்காக நாட்டின் நிதியைச் செலவிட வேண்டும் என்பதை நினைத்துக் கூட பார்க்க முடியாது.”**

- என்று கூறியது மெக்கலேயின் கல்வி அறிக்கை.

பார்ப்பனர்கள், இப்போதும் மெக்காலே என்றால் வெறுப்பதற்கும், மெக்காலே கல்வி முறையை ஒழிப்போம் என்று சங்பரிவாரங்கள் சபதமேற்பதற்கும் காரணமே, வேத மரபான சமஸ்கிருதத்தைக் கடுமையாக மெக்காலே சாடினார் என்பதுதான்.

பார்ப்பனருக்கு மட்டுமே படிக்கும் உரிமை வேண்டும். அவர்களுக்கு மட்டுமே சமஸ்கிருதக் கல்லூரிகளை உருவாக்க வேண்டும் என்று பிரிட்டிஷ் ஆட்சிக்கு மனுப்போட்ட கும்பல்தான் தேசபக்தி பற்றியும் ஏதோ தங்களை தமிழின் காவலர்கள் போலவும் வாய்கிழிய பேசிக் கொண்டிருக்கிறது.

மெக்காலே கொண்டு வந்த கல்வித் திட்டம் தான். பார்ப்பனர்கள் மட்டுமே படிக்கும் தகுதி பெற்றவர்கள் என்ற இறுமாப்பை அடித்து நொறுக்கி, பார்ப்பனரல்லதாருக்கான கல்வி உரிமைகளுக்கு கதவு திறந்தது.

வேதத்துக்கு அதிகாரம் படைத்தவர்கள் பார்ப்பனர்கள்தான் என்று சீனியர் சங்கராச்சாரி சந்திரசேகரேந்திர சரசுவதி திட்டவட்டமாகக் கூறுகிறார்: “வேதம் அதிலே அதிகாரம் பெற்றவர்களிடத்தில் மட்டும் பேசிற்று. இன்னின்ன சுலோகங்களை நீங்கள் மறைவாகப் போற்றி வாருங்கள் என்று (அதற்குரிய) அதிகாரிகளுக்கு சொல்லிற்று” - என்கிறார் சங்கராச்சாரி.

வேதம் ஏன் இருக்க வேண்டும் என்பதற்கு சங்கராச்சாரி காரணம் கூறுகிறார், பாருங்கள்:

“வேதம் ஏன் இருக்க வேண்டும் என்றால், முதலில் அந்த ‘மந்திர சப்தம்’ அதிலுள்ள ‘யக் ஞாதி’ கர்மாக்கள் உபயோகத்தில் இருந்து கொண்டிருந்தாலே, சகலருக்கும் ஷேமம்! இதனால், மழை தனதான்ய சுபிட்சம் உண்டாவதோடு ஜனங்களில் எண்ணங்களும் உத்தமமானதாக ஆகும். இரண்டாவது உலகம் முழுவதுமான மதம் வைதீகமே இருந்திருக்கிறது என்பதும், சகல தேசத்தவரும் தெரிந்து, இதனாலே ஒரு ஒற்றுமை, சாந்தி ஏற்பட வேண்டுமானால், நம் தேசத்தில் வேதத்துக்கு என்றே வாழ்க்கையை அர்ப்பணிக்கும் ஒரு கூட்டம் இருந்து கொண்டே இருக்க வேண்டும்” - என்றார், சங்கராச்சாரி.

அவர் என்ன கூற வருகிறார், பாருங்கள்!

1. வேதம் மட்டுமே அனைவருக்கும் நன்மையை உருவாக்கும்.
2. அந்த மந்திர ஒலி உலகத்தில் கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும்.
3. மழை பெய்ய, உணவுப் பொருள் உற்பத்திப் பெருகச் செய்ய வைக்கும் சக்தி வேதத்துக்கு உண்டு.
4. மக்களிடம் நல்ல எண்ணம் வேதத்தால் மட்டுமே வரும்.
5. இந்த வைதீக மதம் - ஏதோ, இந்த நாட்டுக்குரியது மட்டுமல்ல; உலகம் முழுவதற்குமான மதமே இதுவாகத்தான் இருந்திருக்கிறது.
6. சகல நாட்டினருக்கும் அமைதி ஒற்றுமையை ஏற்படுத்தியது வேதம்

**‘சதி’ நெருப்பில் பார்ப்பனர் தள்ளிய பெண்ணை மீட்ட பிரிட்டிஷ் அதிகாரி**

- என்று பட்டியலிட்டு, கடைசியாக வைக்கிறார் ‘ஆப்பு’. இவ்வளவு சுபிட்சமும் கிடைக்க நமது நாட்டில் வேதத்துக்கு என்றே வாழ்க்கையை அர்ப்பணிக்க ஒரு கூட்டம் இருந்து கொண்டே இருக்க வேண்டும். அதாவது புரோகிதத்தையே தொழிலாகக் கொண்டே ஒரு தனிக் கூட்டமான ‘பிராமணன்’ இருந்தால்தான் மழை வரும், உணவு உற்பத்தி பெருகும், சகல தேசத்தவருக்கும் அமைதி கிடைக்கும்; உலகமே வாழும். பார்ப்பனர்கள் சமூகத்தில் எவ்வளவு உயரத்தில் தன்னை நிலை நிறுத்தியிருக்கிறார்கள், பார்த்தீர்களா?

சங்கராச்சாரி கூற்றுப்படியே கேட்கிறோம்; ‘வேதம் படிக்காமல்’ உலகம் முழுதும் அதிகார மய்யங்களில் உயர்பதவிகளில் உட்கார்ந்துக் கொண்டிருக்கும் பார்ப்பனர்கள், ‘வேதத்துக்கு’ துரோகம் செய்துவிட்டு ஓடியவர்கள்தானே? ‘பிராமணன்’ கடல் தாண்டக்கூடாது என்கிறது வேதம். பார்ப்பனர்கள் மதித்தார்களா? வட்டமேஜை மாநாட்டுக்கு இந்தியாவிலிருந்து பிரதிநிதியாக பங்கேற்கச் சென்ற மதன்மோகன் மாளவியா என்ற வைதீகப் பார்ப்பனர், ‘கடல் தாண்டிய பாவ’த்துக்காக பரிகாரம் தேட தன்னுடன் கங்கை நீரையும், புண்ணிய மண்ணையும் உடன் எடுத்துப் போய் இலண்டனில் தோஷப் பரிகாரம் செய்தார். அதனாலே ‘மண்ணுருண்டை மாளவியா’ என்று அழைக்கப்பட்டார். ‘இந்து தர்மத்தை’ இந்து மதத்தை மட்டும் புண்படுத்துகிறார்கள் என்று கூப்பாடு போடும் ‘பரிவாரங்கள்’, முன்னணிகள், ‘இந்து’ வைதிக தர்மத்தை அவமதித்து, அமெரிக்காவுக்கும் கனடாவுக்கும், ஆஸ்திரேலியாவுக்கும் பறக்கும் பார்ப்பனர்களை ஏன் கண்டிக்கவில்லை?

‘மனு தர்மப்படி’ பார்ப்பான் ஓட்டல் நடத்துவதே பாவம். ஆனால் ஓட்டல் நடத்தாமலா இருக்கிறார்கள்? அது மட்டுமா? கணவனை இழந்த பெண்களை உயிரோடு அதே நெருப்பில் போட்டு எரித்ததுதான் ‘வேத மரபு’. இப்போது சட்டப்படி அது குற்றம். இதற்கான தடைச் சட்டம் வந்தபோது அதையும் பார்ப்பனர்கள் எதிர்த்தார்கள்.

இராஜாராம் மோகன்ராய்க்கு முன்பே 1799லேயே ‘செரம்பூர் கிறிஸ்தவ சேவை’ இயக்கம் சதிக்கு எதிரான பிரச்சாரத்தைத் தொடங்கியது, 15 ஆண்டுகள் பார்ப்பனர்கள் சதியைத் தடை செய்யக் கூடாது என்றும், இந்து மதத்துக்கு எதிராக கிறிஸ்துவ சதி என்றும் எதிர்ப்பு தெரிவித்து தடைச் சட்டம் வராமல் தடுத்தார்கள். 1829இல் தான் வைஸ்ராயாக இருந்த வில்லியம் பென்டிங், சதியைத் தடை செய்து சட்டம் கொண்டு வந்தார். வேத மரபு, அவ்வளவு கொடுமையானது.

தஞ்சாவூரிலே ஒரு சம்பவம் நடந்தது. மராட்டியப் பார்ப்பனக் குடும்பத்தைச் சார்ந்த ஒருவர் இறந்த தீயில் அவரது மனைவியை உயிருடன் தீயில் தள்ளப் பார்ப்பனர்கள் முயன்றபோது அந்தப் பெண் உயிருக்கு அபயம் தேடி அலறினாள். அவள் பெயர் கோகிலா. சிதையிலே பார்ப்பனர்கள் கட்டாயப் படுத்தித் தள்ளி தீயிடப்படும் நேரத்தில் அந்த வழியே வந்த - அலறல் சத்தம் கேட்ட ஆங்கிலேய படைத் தளபதி கேப்டன் லிட்டில்ஸ்டன் என்பவர், ஓடிப் போய் பார்ப்பனர்களை மிரட்டி அந்தப் பெண்ணை உயிருடன் மீட்டு, தன்னுடன் அழைத்துச் சென்றார். தனக்கு உயிரை மீட்டுத் தந்த அந்த படைத் தளபதியையே கோகிலா காதலித்து திருமணம் செய்து கிறிஸ்துவ மதம் மாறி, கிளாரிந்தா என்று பெயர் மாற்றிக் கொண்டு வாழ்ந்தார். ஆங்கிலேய தளபதியும், தனது காதல் கணவருமான லிட்டில்ஸ்டன் மரணத்திற்குப் பிறகு கணவர் விருப்பப்படி, கிறிஸ்தவ சீர்திருத்தச் சபையை நெல்லையில் தொடங்கினார்.

சொல்லப்போனால், வேதத்தில் ‘சதி’ என்ற மனைவியை உயிருடன் எரிக்கும் எந்த கருத்தும் இல்லாத நேரத்தில் வேதத்தையே பார்ப்பனர்கள் நயவஞ்சகமாக திருத்தினார்கள். வேத மரபு மனித விரோதமானது, கொடூரமானது என்பதற்கு இதுவும் ஒரு சான்று. வேதத்தை எப்படி திருத்தினார்கள்?

ரிக் வேதத்தின் 10ஆவது அத்தியாயம் 18ஆவது பிரிவில் 8ஆவது உட்பிரிவு இப்படி கூறுகிறது:

“பெண்ணே எழு; இறந்துவிட்ட ஒருவருடன் ஏன் படுத்துக் கொண்டிருக்கிறாய்? உயிர் வாழ்ந்து கொண்டிருப்பவர்களின் உலகத்துக்கு வந்து, உன்னை திருமணம் செய்து கொள்ள விரும்பும், ஒரு ஆண் மகனின் மனைவியாக இரு” என்பதுதான் சுலோகத்தின் கருத்து. கணவன் இறந்த பிறகு, அந்தப் பெண் ‘வர்ணத்துக்கு’ வெளியே திருமணம் செய்து கொள்ளும் நிலை பரவி, வர்ணக் கலப்புகள் நடந்தன. அதைத் தடுக்கவே ‘பிராமணர்கள்’ கணவன் சிதையோடு மனைவியை உயிருடன் எரிக்க சதித் திட்டம் தீட்டி, அதற்காக வேதத்தையும் திருத்தினார்கள். இதைச் செய்தவர்கள் வங்காள புரோகிதப் பார்ப்பனர்கள், ரிக் வேதத்தில் 10ஆவது அத்தியாயத்தில், கணவர் இறந்த பிறகு பெண்கள் மயானத்துக்குச் செல்வது பற்றி குறிப்பிடுகிறது: “விதவையாகி விட்டதால் எந்தத் துன்பமும் இந்தப் பெண்களுக்கு வராமல் இருக்கட்டும்” என்ற அந்த ரிக் வேத சுலோகத்தில் ‘அக்ரே’ என்று ஒரு சொல் இருந்தது. அதைப் பார்ப்பன புரோகிதர்கள், ‘அக்னே’ என்று திருத்தி, உடன்கட்டை ஏறுவதற்கான சூத்திரமாக்கிவிட்டார்கள். இந்த தில்லுமுல்லுவை பார்ப்பனர்களால் நேசிக்கப்பட்டு, வேதங்களை விதந்தோதிய மாக்ஸ்முல்லர் என்ற ஜெர்மானியரே அம்பலப்படுத்தியிருக்கிறார்.

இந்து மதம் அங்கீகரிக்கும் வேத மரபுப்படி ஒரு சன்னியாச, பணத்தைக் கையால்கூட தொடக் கூடாது; கால்நடையாகவே பயணம் செய்ய வேண்டும் என்று சன்னியாசிகளுக்கான சன்யா ஸ்மிருதி கூறுகிறது.

**“வாகஸ்தம் யதீம் திருஷ்ட்வா
சஜேய ஸ்நான மாசரேது”**

இதன் பொருள் என்ன? எத்தனை மாற்றங்கள் உலகில் வந்தாலும் கால்நடையாகத் திரிந்துதான் உபதேசம் செய்ய வேண்டும். வாகனங்களில் பயணிப்பது மதவிரோதம்; தர்ம விரோதம். குதிரை வண்டி, மாட்டு வண்டியைப் பார்ப்பதே பாவம். அப்படிப் பார்த்தால் அந்த கணமே தலைமுழுகி, ‘ஸ்நானம்’ போட வேண்டும். அதாவது குளிக்க வேண்டும் என்கிறது ‘சந்யாச ஸ்மிருதி’. இதை சுட்டிக்காட்டியிருப்பவர் வேத விற்பன்னரான அக்னி ஹோத்ரம் இராமானுஜ தாத்தாச்சாரி. ஆனால் சங்கராச்சாரி சொகுசு காரில்தான் சுற்றுகிறார். உலகிலே விலை உயர்ந்த கார்களில்தான் ‘ஆன்மிக’ சாமியார்கள் பவனி வருகிறார்கள். ‘ஆச்சாரம் போய்விட்டது; இந்து வேத மதத்தை அவமதிக்கிறார்கள்’ என்று ‘இந்துமத காவலர்கள்’ ஓடிப் போய் வரவேற்பு தருகிறார்களே! ஏன் கேட்கவில்லை?

(4ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# கொளத்தூர் கழக செயல் வீரர் டைகர் பாலன் இல்ல மண விழா




சேலம் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக அமைப்பாளர், புலிகள் மின்கலப் பணி மையம் டைகர் பாலு - ஜோதிமணி இணையரின் மகள் ஜோ.பா. ஓவியா - கோபிச் செட்டிப்பாளையம் குணசேகரன்- உமா இணையரின் மகன் கோ.கு.முகிலன் ஆகியோரின் ஜாதி மறுப்பு வாழ்க்கை இணையேற்பு விழா, 14-2-2014 அன்று காலை 11-00 மணிக்கு, கொளத்தூர் எஸ்.எஸ்.மகால் திருமண மண்டபத்தில், தந்தை பெரியார் திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் கோவை.கு.இராமகிருட்டிணன் தலைமையில் நடந்தேறியது. சேலம் மாவட்ட தி.வி.க. தலைவர் கொளத்தூர் சூரியகுமார் வரவேற்புரை ஆற்றினார். தி.வி.க. தலைவர் கொளத்தூர் மணி, வாழ்க்கை இணையேற்பு ஒப்பந்த உறுதிமொழிகளைக் கூறச்செய்து நிகழ்த்திவைத்தார்.

த.பெ.தி.க. அமைப்புச் செயலாளர் கோவை. வெ. ஆறுச்சாமி, தி.வி.க. பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், கோபி கலைக் கல்லூரி தமிழ்த் துறை தலைவர் (ஓய்வு) பேராசிரியர் செ.சு. பழனிசாமி, கோபி மாவட்ட தி.க. தலைவர் யோகானந்தம், திண்டுக்கல் சம்பத், தூத்துக்குடி பால் பிரபாகரன், கோபி ம.தி.மு.க. மா.கந்தசாமி, சென்னை அண்ணாமலை ஆகியோர் விழா விளக்கவுரை ஆற்றினர். கவிஞர் ஜாகிர் உசேன் வாழ்த்துக் கவிதை வாசித்தார். இறுதியாக, மணமகனின் தந்தை குணசேகரன் நன்றி கூற விழா நிறைவடைந்தது.

விழாவுக்கு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து தி.வி.க., த.பெ.தி.க., தி.க., இயக்கத் தோழர்கள், இன உணர்வாளர்கள், நண்பர்கள், உறவினர்கள் என அரங்கம் நிறைந்து வழிந்தது. மதியம் அனைவருக்கும் அசைவ உணவு வழங்கப்பட்டது. இணையேற்பு விழா மகிழ்வாக மணமக்கள் ‘பெரியார் முழக்க வளர்ச்சி நிதி’யாக ரூ. 5,000-00 வழங்கினர்.

## திருப்பூர் இலட்சுமிநாதன் முடிவெய்தினார்



திருப்பூரில் பெரியாரைப் பேணிய குடும்பம் தோழர் அருணாசலம் அவர்களின் மகள் இலட்சுமி நாதன் (93) பிப்ரவரி 9, மாலை 3 மணிக்கு பெரியார் காலனியில் உள்ள அவரின் இல்லத்தில் இயற்கை எய்தினார். கடல் கடந்து இலங்கை சென்று தன் உழைப்பால் ஜவுளி வியாபாரத்தை கொழும்பு மற்றும் மதுரையில் நிறுவிய அருணாசலம் , இளவயது முதல்கொண்டே பெரியாரிய கொள்கையில் நாட்டம் கொண்டு குடிஅரசு பத்திரிக்கையை தொடர்ச்சியாக படித்து தன் குடும்பத்தார் அனைவரையும் பெரியாரிய வாழ்க்கை முறைக்கு திருப்பினார். மூத்த மகனின் சுயமரியாதை திருமணத்தை திருப்பூரில் தந்தை பெரியாரைக் கொண்டு மிக சிறப்பாக நடத்தினார். அவரின் இரு மகள்களில் ஒருவரான இலட்சுமி நாதன், பெரியார் திருப்பூர் வரும்போதெல்லாம் அவருக்கு பிடித்தமான பிரியாணி செய்து பெரியாருக்குக் கொடுத்து உபசரிப்பார். 1945 மதுரை சுயமரியாதை மாநாட்டில் குடும்ப சகிதம் கருப்பாடை அணிந்து கலந்துகொண்டு கொள்கைத் தூணாய் இருந்தவர். சுயமரியாதை வாழ்வின் அங்கமாய் தன் இரு மகன்களுக்கும் இரணியன், மேகநாதன் என்று பெயரிட்டு வளர்த்தார். இன்றும் குடிஅரசு பத்திரிக்கையில் வந்த தங்களை பற்றிய பல செய்திகளை தோழர்களுடன் பகிர்ந்து கொள்வார். திருப்பூரில் பெரியார் தோழர்கள் அனைவருக்கும் தன் விருந்தோம்பல் பண்பால் இன்சொல் கூறி வரவேற்று உபசரிப்பார்.

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேதத்தை வேத மரபுகளை பார்ப்பனர்கள் தங்கள் வசதிக்கேகற்ப மீறிக் கொள்வார்கள். ஆனால் வேதத்தைக் கேள்விக் கேட்ட ‘சூத்திரர், பஞ்சமர்’களை சாகடிப்பார்கள். “நாத்திகன் என்றால் கடவுளை மறுக்கிறவர்கள் அல்ல; வேதத்தை மறுப்பவர்கள்தான் நாத்திகர்கள்” என்கிறார் சங்கராச்சாரி. வேதத்தை மறுப்பவர்களுக்கு நோய் வந்தால் அவர்களுக்கு வைத்தியமே செய்யக் கூடாது என்கிறார், செத்துப் போன சங்கராச்சாரி. அவரது ‘தெய்வத்தின் குரல்’ நூலிலிருந்தே படிக்கிறேன், கேளுங்கள்:

> *“நாஸ்திகர்களுக்கு வைத்யம் பண்ணி ஆயுளை நீடிக்கப் பண்ணினால் அவன் மேலும் நாஸ்திகப் பாவத்தை விருத்தி செய்து கொள்ள இடம் தருவதாக ஆவதால் அவனுக்கு வைத்யம் பண்ணாதே என்று ‘ஆயுர்வேத சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது. ஆனபடியால் மக்கள் பணி எல்லாம், அந்த மக்களை பகவானிடம் சேர்ப்பதுதான். கருணையில்லாமல் இப்படி சொல்லியிருக்கே என்று தோன்றலாம். ஆனால் உண்மையில் இப்படிச் சொன்னதே கருணையினால்தான். வியாதியின் கஷ்டம் தெரிகிறது. கஷ்டம் என்று வரும்போதுதான் எப்படியாவது அதிலிருந்து மீள வேண்டும் என்ற தவிப்பில் கடவுள் இருப்பது நிஜமானால் என்னை அவன் காப்பாற்றட்டும். நான் அப்புறம் வேத சாஸ்திரப்படி நடக்கிறேன் என்று ஒரு நாஸ்திகன் நினைக்க முடிகிறது” என்கிறார் சங்கராச்சாரி.*
>
> *சாவின் விளிம்புக்கு ஒருவரைத் தள்ளி, கழுத்தில் கத்தியை வைத்து, ஒரு திருடன் ‘போட்டிருக்கிற நகைகளைக் கழற்று’ என்று கூறுவதற்கும், சங்கராச்சாரியின் இந்த கருத்துக்கும் என்ன வேறுபாடு இருக்க முடியும்?*

வேத மரபை எதிர்க்கும் உரிமை எவருக்குமே கிடையாது என்ற திமிரையும் கொழுப்பையும் தத்துவமாகவே வைத்துக் கொண்டு, அதைப் புனிதம்; எதிர்ப்பவன் ‘இந்து மத விரோதி’ என்று ஒரு கூட்டம் இப்போதும் பேசித் திரிந்து கொண்டிருக்கிறது. இந்தக் கொடூரமான வரலாறுகளை மக்களிடம் கொண்டு போக வேண்டிய நிலையை அவர்களே நமக்கு உருவாக்கியிருக்கிறார்கள்.

ஆண்டாளுக்காக அவர் தேவதாசி மரபைச் சார்ந்தவர் என்று வைரமுத்து கூறி விட்டார் என்பதற்காக சாக்கடை மொழியில் எச்.ராஜாக்களும், ஜீயர்களும் கூச்சல் போடுவதில் அர்த்தமிருக்கிறதா? அந்தக் கதையை அடுத்து பார்ப்போம்!

(தொடரும்)

# கழகம் எடுத்த தமிழர் திருநாள் எழுச்சி

**கடலூர் :** கடலூர் மாவட்ட திராவிடர் விடுதலை கழகம் சார்பாக 2018ஆம் ஆண்டு தமிழர் திருநாளை முன்னிட்டு மாணவ, மாணவிகளை ஊக்குவிக்கும் பொருட்டு விளையாட்டு போட்டி, கட்டுரைப் போட்டி, திருக்குறள் போட்டி, ஓவியப் போட்டி மற்றும் ஓட்டப் பந்தயம், கோ-கோ போன்ற எண்ணற்ற போட்டிகள், காவல் துறையின் எதிர்ப்பை மீறி, ஒலிபெருக்கி அனுமதி மறுத்த போதும் அதை பொருட்படுத்தாது நடத்தியே தீருவோம் என்று நமது தோழர்களும், கிராம பொதுமக்களும், தீர்மானம் போட்டு சிறப்பாக நடத்தி முடித்தனர்.

16.01.2018 அன்று இரவு பரிசளிப்பு விழா நடைபெற்று விழா இனிதே முடிவுற்றது. விழாவை முன்னின்று மிகச் சிறப்பாக நடத்திய திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் நட. பாரதிதாசன் (மாவட்டச் செயலாளர்), நட. பாபு அம்பேத்கர், பாலமுருகன் சிலம்பரசன், மற்றும் தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர்கள் பாலாஜி, தினேஷ், மோகன், மணிகண்டன் ஆகியோர் முன்னின்று நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தனர்.

**பேராவூரணி :** போராட்டப் பண்பே தமிழர்களின் வரலாறு”-பேராவூரணி பொங்கல் விழாவில் கல்லூரி மாணவி பேசினார்.

பேராவூரணியை அடுத்த பாங்கிராங் கொல்லை ஊரில் விழியழகன்கள் மக்கள் பொதுநல இயக்கத்தின் சார்பில் 25 ஆம் ஆண்டு பொங்கல் விழா மற்றும் விளையாட்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. சங்கத்தின் தலைவர் திலகன் தலைமையில் நடைபெற்ற விழாவில் சங்கத்தின் பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள், ஒட்டு மொத்த ஊர்ப் பொது மக்கள் அனைவரும் கலந்து கொண்டனர். காலை 10 மணிக்கு தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கியது. தொடர்ந்து நீட் தேர்வு முறையை எதிர்த்துப் போராடி உயிர்நீத்த அனிதா, ஓங்கிப் புயலால் பாதிப்படைந்து இந்திய அரசால் அலட்சியப்படுத்தப்பட்ட மீனவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. பிறகு பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. நண்பகல் 2 மணிக்கு ஊர் கூடி உணவருந்தும் நிகழ்ச்சி நடைபெற்றது. மாலையில் கருத்தரங்கம், கலைநிகழ்ச்சிகள் மற்றும் பரிசளிப்பு விழா நடைபெற்றது.

கருத்தரங்கில் கல்லூரி மாணவி மா.முத்தமிழ்ச்செல்வி பேசியது, “தமிழக மக்கள் தொடர்ந்து பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகிறார்கள். போராட்டம் மட்டுமே மனித வாழ்வின் அடையாளம். அந்த போராட்ட உணர்வுடன் வாழ்வதுதான் தமிழின வாழ்வு. தொன்றுதொட்டு இயற்கையோடு போராடிப் போராடித்தான் வேளாண்மைத் தொழில் பழகினோம். ஆனால் இன்று அரசாங்கத்தோடு போராடும் நிலை உள்ளது. எந்த மன்னனிடமும் இயற்கையை அழிக்கும் பண்பு இருக்கவில்லை. ஆனால் மக்களாட்சியில் பொறுப்பில் உள்ள ஆட்சியாளர்கள் இயற்கையை அழிக்கும் நிலையை எடுத்து வருகிறார்கள். அதனால் இப்போது ஆட்சியாளர்களை எதிர்த்துப் போராடி வாழ வேண்டியுள்ளது. இயற்கை யோடு போராடும்போது வெற்றி கிடைத்தது. ஆனால் ஆட்சியாளர்கள் போராட்டங்களை நசுக்கி வருகிறார்கள் இயற்கைக்கு மாறான மீத்தேன், ஐட்ரோகார்பன் போன்ற திட்டங் களால் நமது வாழ்வாதாரமான இயற்கையை அழிக்க நினைக்கிறார்கள். அதை எதிர்த்துப் போராடி வெற்றி கண்டாக வேண்டும். போராட்டமே நமது தமிழர்களின் வரலாறு” என்றார். கருத்தரங்கில் செய்தியாளர் வேத. குஞ்சருளன், மெய்ச்சுடர் நா.வெங்கடேசன், விதை நெல் இலக்கிய அமைப்பின் பொறுப் பாளர் புஷ்பராஜ், திராவிடர் விடுதலைக் கழக பொறுப்பாளர் தா.கலைச்செல்வன் ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள்.

சிறப்பு அழைப்பாளர்களாக சட்டமன்ற உறுப்பினர் மா.கோவிந்தராசு. பேரூராட்சியின் மேனாள் தலைவர் நா.அசோக்குமார் உள்ளிட்ட அரசியல் கட்சிகளின் பொறுப் பாளர்கள் கலந்து கொண்டனர்.

**திருப்பூர் :** திராவிடர் விடுதலைக் நடத்தும் 9ஆம் ஆண்டு பொங்கல் விழா திருப்பூர் மாஸ்கோ நகரில் பெரியார் திடலில் 28012018 நடைபெற்றது.

காலையில் பொங்கல் வைத்து நிகழ்ச்சியை தொடங்கிய கழக தோழர்கள், சிறுவர் சிறுமிகளுக்கான பல்வேறு விளையாட்டு போட்டிகளை நடத்தினர். ஓட்டப் பந்தயம், சைக்கிள் மெதுவாக செலுத்துதல், உறியடி, நீர் சேகரித்தல் உட்பட பல்வேறு போட்டிகளில் 100க்கும் மேற்பட்ட குழந்தைகள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். மாலை 5 மணிக்கு விரட்டு கலைக் குழுவின் பறையிசையோடு கலைநிகழ்ச்சி தொடங்கியது. பல்வேறு கிராமிய நிகழ்ச்சிகளின் இடையே திராவிடர் விடுதலைக்கழகத்தின் பணிகளை பண்பாட்டு மீட்டெடுப்பை நினைவு கூர்ந்தனர்.

ஒயிலாட்டம், மயிலாட்டம், சிலம்பம், கூத்து, படுகர் ஆட்டம், குறவர் ஆட்டம், போர் சிலம்பு, சிலம்பாட்டம் மற்றும் நெருப்பாட்டம் என்று பல்வேறு நிகழ்ச்சிகளோடு பகுத்தறிவு பாடல்களைப் பாடி மக்களுக்கு தமிழர் விழா என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று பறைசாற்றினர்.

விரட்டு கலைக்குழுவின் நிகழ்ச்சியைத் தொடர்ந்து தை 1 தமிழ் புத்தாண்டு 9வது ஆண்டு தமிழர் விழாவில் தமிழ்நாடு அறிவியல் மன்ற அமைப்பாளர் சிவகாமி புத்தாண்டின் சிறப்பை நினைவுகூர்ந்தார். தொடர்ந்து மாநில பொருளாளர் துரைசாமி சிறப்புரைக்குப் பின் வெற்றி பெற்ற குழந்தைகளுக்கு பல்வேறு பரிசுகளை வழங்கினர். நிகழ்ச்சி 11 மணி யளவில் முடிந்தது. மாவட்ட செயலாளர் நீதிராசன் மற்றும் தலைவர் முகில்ராசு மாவட்ட அமைப்பாளர் அகிலன் மாநகர செயலாளர் மாதவன் பொங்கல் வழங்கி விழாவினைத் தொடங்கி வைத்து தொடர்ந்து 5 வாரமாக வீதி வசூலுக்கு வந்து மக்களிடம் நம் செய்தியைக் கொண்டு செல்ல வேண்டும் என்று எங்களுக்கு உறுதுணையாக ஊக்கமாக இருந்து கழகப் பொருளாளர் துரைசாமி மற்றும் மாவட்டத் தலைவர் முகில்ராசு, நீதிராசு, தனபால், கருணாநிதி, ராமசாமி, முத்து, நாகராஜ், மணி, கணபதி, ஜெயா ராமசாமி.

**கா.க.புதூர்:** பொள்ளாச்சி கா.க. புதூரில் தமிழ்ப் புத்தாண்டு, தமிழர் திருநாள் விழா நிகழ்ச்சிகள் ஜன.15, 2018 அன்று எழுச்சியுடன் நடந்தது. ஆனைமலை காவல் துறை நிகழ்ச்சிக்கு அனுமதி தர மறுத்தது. உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு நீதிமன்றம் வழியாக அனுமதி பெற்று நிகழ்ச்சி நடந்தது. வழக்கறிஞர் திருமூர்த்தி வழக்குத் தொடர்ந்து கழகத்துக்காக வாதாடினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி விழாவில் சிறப்புரையாற்றினார். விழாவையொட்டி கோலப் போட்டிகளும், ரோஜா குழுவினர் பறை யிசையும், மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் சிறப்புடன் நடந்தன. கா.க.புதூரில் இந்த நிகழ்ச்சியை தடைப்படுத்துவதற்கு மதவெறி அமைப்புகள் பல்வேறு முயற்சிகளை செய்தனர். விழாவில் கலவரம் செய்யும் முயற்சிகளிலும் ஈடுபட்டனர். பெரும் திரளாக திரண்டிருந்த மக்கள் கூட்டம், மதவெறியர்களின் முயற்சியை முறியடித்தது. தமிழ்நாடு திராவிடர் கழகத் கா.சு.நாகராசன், கழகப் பொறுப்பாளர் வெள்ளியங்கிரி, வழக்கறிஞர் பிரபாகரன் மற்றும் ஆனைமலைத் தோழர்கள் முயற்சியால் விழா எழுச்சியுடன் நடந்தது.

### புரட்சிப் பெரியார் முழக்கம்; முக்கிய வேண்டுகோள்!

சந்தா முடிவடைந்த தோழர்களுக்கு இதழ் நிறுத்தப்பட்டுள்ளது. தோழர்கள் சந்தாக்களை புதுப்பித்தல் மற்றும் புதிய உறுப்பினர் சேர்க்கைக்கான பணிகளை விரைந்து முடிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

– நிர்வாகி

98414 89896

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 22nd February 2018

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN